**செய்தி வெளியீடு எண்: 76** **நாள்: 29.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மக்கள் அனைவருக்கும் அடிப்படையான தேவைகள் உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் ஆகும். இந்த தேவைகளின் ஒன்றான உறைவிடம் அனைத்து மக்களும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்டது தான் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆகும். அனைத்து மக்களுக்கும் சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர், மத்தியதர வருவாய் பிரிவினர், உயர்தர வருவாய் பிரிவினர் என பல்வேறு பிரிவினைச் சார்ந்த மக்களுக்காக, தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் மனைகள் அபிவிருத்தி, தனி வீடுகள் கட்டுதல், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்பொழுது, சென்னை மாநகரம் வேகமாக விரிவடைந்து வருகிறது. தற்பொழுது தமிழகத்தில் நிலவி வரும் அமைதியான சூழ்நிலையினால் பல்வேறு தொழில் நிறுவனங்கள், தங்களது நிறுவனங்களின் சார்பில் தமிழகத்தில் பல்வேறு தொழிற்சாலைகளை தொடங்கி வருகின்றனர். இதனால் சென்னையில் மக்கள் பெருக்கம் அதிகரித்துள்ளது. எனவே, இதற்கு ஏற்ப வீட்டு வசதி தேவையும் அதிகரித்துள்ளது. மேலும் சென்னையில் வீட்டு மனைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளின் விலை பெருமளவில் உயர்ந்துள்ளது. சென்னை நகரில் மக்கள் தொகைப் பெருக்கம், வீட்டுவசதித் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எல்லா தரப்பு மக்களுக்கும் குறைந்த விலையில் வீடுகள் கிடைக்கும் வகையில் பல்வேறு வீட்டுவசதி திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

சென்னை மாநகரில், பீட்டர்ஸ் காலனி, லாயிட்ஸ் காலனி, தாடண்டர் நகர் பகுதி I & II உள்ளிட்ட 17 இடங்களில் அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்டுள்ள வாடகைக் குடியிருப்புகள், கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால், அவைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அக்கட்டடங்களை பழுது பார்ப்பதற்கு மிக அதிக செலவினம் ஏற்படுகிறது என்பதால், அந்த இடங்களில் புதிய வீடுகள் கட்டுவதே சிறந்தது ஆகும். எனவே, இந்த 17 இடங்களில், தற்போதுள்ள 2,238 பழைய வாடகைக் குடியிருப்புகளை இடித்து விட்டு, அதிக தளப்பரப்பளவு குறியீடு (FSI) கொண்ட புதிய குடியிருப்புகளை அதிக எண்ணிக்கையில் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்காக வாடகைக் குடியிருப்புகளும் மற்றும் பொது மக்களுக்காக சுயநிதி திட்டத்தின்கீழ் அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் செயலாக்கத்தில் முதற்கட்டமாக அரசு ஊழியர்களுக்காக 2,522 வாடகைக் குடியிருப்புகள் மற்றும் பொதுமக்களுக்காக சுயநிதி திட்டத்தின் கீழ் 1,770 அடுக்குமாடி குடியிருப்புகளும், இரண்டாம் கட்டமாக அரசு ஊழியர்களுக்காக 1,124 வாடகைக் குடியிருப்புகளும், பொதுமக்களுக்காக சுயநிதி திட்டத்தின் கீழ் 838 குடியிருப்புகளும் ஆக மொத்தத்தில், 3,646 அரசு ஊழியர் வாடகை அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 2,608 பொதுமக்களுக்கான சுயநிதித் திட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் என 6,254 குடியிருப்புகளை 1,740 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

திட்டமிட்ட வளர்ச்சி, நகர்புறங்களில் உள்ள மக்கள் தேவையான அடிப்படை வசதிகளை பெற வழிவகை செய்யும். முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் நகரங்களுக்காகத் தயாரிக்கப்படும் திட்டப் பகுதியில் ஒழுங்கான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான ஒழுங்குப்படுத்தும் வழிகாட்டி நெறிமுறைகளுடன் கூடிய திட்டமாகும்.

தற்பொழுது நகர் ஊரமைப்பு ஆணையரகத்தின் கீழ் வரும் மொத்த பரப்பளவு
1,28,869 சதுர கிலோ மீட்டர் ஆகும். ஆனால் முழு திட்டம் தயாரிக்கப்பட்ட பரப்பளவு 6950 சதுர கிலோ மீட்டர் தான். திட்டமில்லா பகுதியின் பரப்பு - 1,21,919 சதுர கிலோ மீட்டர். இவற்றில் விவசாய நிலங்கள் 58,243 சதுர கிலோ மீட்டர், மற்றும் வனத்துறை நிலங்கள் 21,431 சதுர கி.மீ. போக மீதமுள்ளவை 42,245 சதுர கிலோ மீட்டர் ஆகும். திட்டமில்லா பகுதியில் கட்டுப்பாடற்ற நகர்ப்புற வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இந்த கட்டுப்பாடற்ற நகர்ப்புற வளர்ச்சியை முறைபடுத்த, திட்டமில்லாப் பகுதி முழுவதற்கும் முழுமையான திட்டங்கள், மூன்று கட்டங்களாக பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

முதற்கட்டமாக 8,447 சதுர கிலோ மீட்டர் உள்ளடக்கிய கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, தூத்துக்குடி, திருப்பூர், ஈரோடு மற்றும் ஓசூர் ஆகிய கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களின் திட்டப்பகுதிகளில் 4.91 கோடி ரூபாய் செலவில் நவீன தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி பாரதிதாசன் பல்கலைக் கழகம் மூலம் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ் முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

நகர ஊரமைப்பு அலுவலகங்களில் கட்டட வரைப்படங்களுக்கான ஒப்புதல் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து அதிக அளவில் வரப்பெறுகின்றன. இவைகளை பரிசீலனை செய்து ஒப்புதல் அளிப்பதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, கோவை, மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச்சி, ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், திருப்பூர், காஞ்சிபுரம் மற்றும் மாமல்லபுரம் உள்ளூர் திட்டப்பகுதிகள், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிப் பகுதி மற்றும் செங்கல்பட்டு மண்டலம் மற்றும் சென்னையில் உள்ள நகர் ஊரமைப்பு ஆணையரகம் ஆகிய அலுவலகங்களில் இணையதளம் மூலமாக கட்டட வரைபடங்களை சரிபார்ப்பதற்கான திட்டத்தினை அமல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்தத் திட்டத்திற்காக 2 கோடியே 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தஞ்சாவூர், ஈரோடு, கோயம்புத்தூர், ஓசூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம், விழுப்புரம், திருநெல்வேலி, சேலம், சென்னையிலுள்ள அண்ணாநகர், கே.கே.நகர் மற்றும் நந்தனம் ஆகிய திட்டப்பகுதிகளிலுள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் அரசு ஊழியர்கள் பாதுகாப்பான குடியிருப்புகளில் வசிப்பதற்கும், பொது மக்களுக்கு குறைந்த விலையில் சொந்தமாக குடியிருப்புகள் கிடைப்பதற்கும், திட்டமில்லா பகுதிகளுக்கு முழுமையான வளர்ச்சி திட்டங்கள் கிடைப்பதற்கும் வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:-இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 29.1.2013.